TAMIL NADU LEGISLATURE LIBRARY
29 AUG 1978
MADRAS

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 17.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 180 முதல் 183 வரை கடைசியில் எடுத்துக்கொள்ளப்படும்.

Bus Service between Alaveli and Mayuram.

* 184 *Q.*—Thiru V. THANGAPANDIAN (on behalf of Thiru K. S. MANI).—Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Cholan Transport Corporation bus service in route No. 20 between Alaveli and Mayuram in Kumbakonam taluk, Thanjavur district, has been recently suspended;

(*b*) if so, whether any representation has been received by the Government from the public requesting the revival of the bus service; and

(*c*) the action taken thereon?

ஆலவெளிக்கும் மாயவரத்திற்கும் இடையே பேருந்து வசதி.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. கோ. சி. மணி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் ஆலவெளிக்கும் மாயவரத்திற்கும் இடையில் 20-ஆம் எண் வழித் தடத்தில் ஓடிக்கொண்டிருந்த சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அண்மையில் நிறுத்தப்பட்டு விட்டனவா ?

(இ) ஆம் எனில், அவைகளை மீண்டும் விடக் கோரி பொது மக்களிடமிருந்து முறையீடு எதுவும் அரசுக்கு வந்துள்ளதா?

(உ) அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) & (இ) ஆம்.

(உ) மாயவரத்திற்கும் ஆலவெளிக்கும் இடையே தனியாக நகரப் பேருந்து ஒன்று விடுவதற்கும், மேலும் மேற்படி வழித்தடத்தில் சில மாற்றங்கள் செய்து மாயவரம் பேருந்து நிலையத்திலிருந்து திருவிந்தளூர், மாப்படுகை, சோளம்பேட்டை, வாணாதிராசபுரம், அஞ்சறுவத்தலை, குத்தாலம் அஞ்சறுவத்தலை, ஆலங்குடி, கருப்பூர் வழியாக பந்தநல்லூர் வரை பேருந்துகள் விடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, இது போன்ற கேள்விகளை மாவட்ட அபிவிருத்தி கவுன்சில்களிலும் கேட்கின்றோம். இந்த மேலவையிலும் கேட்கின்றோம். இது போன்ற கேள்விகளை எங்குமட்டும் கேட்கலாம், இந்தக் கேள்வி இங்கேதான் கேட்கப்பட வேண்டும், இந்தக் கேள்வி அங்கேதான் கேட்கப்பட வேண்டும் என்பதற்கு வரைமுறை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இங்கே கேட்பதற்குத்தான் நான் சொல்ல முடியும். அதைப்பற்றி நான் இங்கே சொல்ல முடியாது. மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலிலே இந்தக் கேள்விதான் கேட்க வேண்டும், அந்தக் கேள்விதான் கேட்க வேண்டும், இந்தக் கேள்வி கேட்கக்கூடாது என்று வரையறுத்து நான் இங்கே சொல்லமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கத்தினர்கள் இங்கே இந்தமாதிரியான கேள்விகளைக் கேட்க உரிமையுண்டு.

Central Board of Film Censors, Madras.

S.N. 2 Q.—PULAVAR PULAMAI PITHAN (on behalf of THIRU A. K. VILWAM): Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Government have since reconstituted the Advisory Panel for the Central Board of Film Censors at Madras; and

(*b*) if so, whether the State Government was consulted before such reconstitution?